## நீதிபதிகளை ‘புனிதர்கள்’ எனக் கருத வேண்டியதில்லை!

# நீதித்துறையிலும் ஊழல் இருப்பதை மறுக்க முடியாது!

## கருப்பு திரைப்படம் குறித்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு அதிரடி கருத்து!

சென்னை, மே.31- நீதித்துறையில் ஊழல் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று தெரிவித்துள்ள சென்னைஉயர்நீதிமன்றம், நீதிபதிகளை புனிதர்களாக கருதவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. நீதித்துறையை அவமதிக்கும் வகையில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறி கருப்பு திரைப் படத்தை தடைசெய்யக் கோரி, வழக்கறிஞர் தமிழ் வேந்தன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வு கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது.

### கருப்பு திரைப்படத்தின் கதைக்களம்!

அந்த உத்தரவில் நீதிபதிகள், கருப்பு திரைப்படத்தின் கதைக் களம் என்பது ஏழு கிணறு என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு நீதிமன்றம். அதில் இருக்கும் தலைமை நீதிபதி ஊழல்வாதியாகவும், தொழில் நெறிமுறையற்ற வழக்கறிஞர் ஒருவர் நீதி மன்றத்தின் செயல்பாடுகள் மீது அளவற்ற அதிகாரத்தைச் செலுத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. நீதித்துறையில் ஊழல் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஊழல் நீதிபதிகள் இருந்தார்கள், இருக்கவும் செய்கிறார்கள். நீதிபதிகளை புனிதமானவர்களாக கருத வேண்டிய அவசியம் இல்லை.

நீதித்துறையில் ஊழல் என்ற கூற்றுகளை நாங்கள் முழுமையாக ஆதரிக்கவில்லை. நீதித்துறை ஊழல் நிகழ்வுகளை அறிவோம், எதிர்கொண்டும் இருக்கிறோம். சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வும் இதுபோன்ற கருப்பு ஆடுகளை தவறாமல் வெளியேற்றிக்கொண்டுதான் இருக்கிறது. வழக்கறிஞர்கள் சங்கத்தின் சில உறுப்பினர்களுக்கு ஊழல்வாதிகளுடன் தொடர்பு இல்லாமல், நீதித் துறையில் ஊழல் நிகழ முடியாது.

### ஒரு கலைஞனுக்கான சுதந்திரம் வேண்டும்!

ஊழல்வாதிகளைப் பிடிப்பதற்கும், நிலைமையை உரிய முறையில் கையாளுவதற்கும் உயர் நீதிமன்றத்தின் விழிப்புணர்வு கண்காணிப்பே ஆதாரமாக விளங்குகிறது. எந்தவொரு சிறப்புத் திரையிடலையும் ஏற்பாடு செய்யுமாறு தயாரிப்பாளரிடம் கேட்காமல், கருப்பு படத்தை எங்களில் ஒருவரான நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பார்த்துள்ளார். ஒரு நெறிமுறையற்ற வழக்கறிஞருக்கும், ஊழல் நீதிபதிக்கும் இடையிலான தீய கூட்டணியை கொண்ட கருப்பு திரைப்படத்தில், நீதித் துறை அமைப்பு மிகைப்படுத்தி சித்தரிக்கப்பட்டுள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், தமிழில் திரைப்படங்கள் அப்படித்தான் பார்க்கப்படுகின்றன. தன்னைச் சூழ்ந்திருக்கும் டஜன் கணக்கான வில்லன்களை கதாநாயகன் தனி ஒருவனாக வீழ்த்துவான். தமிழ் சினிமாவில் எல்லாமே மிகை உணர்ச்சி கொண்டது. எனவே, ‘கருப்பு’ படத்தையும் ஒரு தனித்துவமான படைப்பாகவே பார்க்க வேண்டும். எப்படியிருந்தாலும், ஒரு கலைஞன் தனது சொந்த வழியில் தன் படைப்பை வழங்குவதற்கு தரப்பட்ட உரிமையே கலைச் சுதந்திரம் என்று அழைக்கப்படுகிறது.

ஒரு கலைப் படைப்பு முற்றிலும் வேறுபட்ட தராசில் எடைபோடப்படும். ஒரு கலைஞனுக்கு அதிக செல்வாக்கும் சுதந்திரமும் உண்டு. ஒரு கார்ட்டூனிஸ்டுக்கு எது பொருந்துமோ அது ஒரு திரைப்படத் தயாரிப்பாளருக்கும் பொருந்தும். அவர் வழங்கும் கதையில் மிகைப்படுத்தல் இருக்கும். தவறுகள் இருக்கும். அது முற்றிலும் புனைகதையாகவும் இருக்கலாம் அல்லது ஒரு செய்தியைக் கொண்டிருக்கலாம் அல்லது பொழுதுபோக்குடன் மட்டும் நின்றுவிடலாம். ஒரு கதையை வழங்கும் விதமும், வழங்கும் உள்ளடக்கமும் படைப்பாளியிடமே விடப்பட வேண்டும்.

### படைப்பாற்றல் மதிக்கப்பட வேண்டும்!

படைப்பாளி தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழையாத வரை படைப்பாற்றல் மதிக்கப்பட வேண்டும். கருத்து சுதந்திரம் என்பது ஒருவரின் கருத்தை வாய்மொழி, எழுத்து, அச்சு, படம் அல்லது வேறு எந்த வகையிலும் வெளிப்படுத்தும் உரிமை ஆகும். இது தகவல் தொடர்பு சுதந்திரம் மற்றும் கருத்தைப் பரப்புவதற்கான அல்லது வெளியிடுவதற்கான உரிமையையும் உள்ளடக்கும்.

கருப்பு திரைப்படம் நீதிமன்ற அவமதிப்பை உள்ளடக்கியது இல்லை என்ற கருத்தின் அடிப்படையில், தணிக்கைச் சான்றிதழ் வழங்கியிருக்கும்போது நீதிப்பேராணை நீதிமன்றம் அதன் கருத்தை மாற்றியமைக்காது. நாம் இப்போது சமூக ஊடகங்களின் காலத்தில் இருக்கிறோம். ஒரு கொடூரமான கூற்று கூறப்பட்டாலும், அதைப் புறக்கணிப்பதே நல்லது. நீதித்துறைப் பயணம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ராமாயணத்தில் ராமனின் அம்பில் சிக்கிய தவளையை போல, நீதிமன்றமே விழிப்புடன் இருக்கும் காவலனாக நிற்கிறது.

### நீதிமன்ற அவமதிப்பாக கருத வேண்டியதில்லை!

அது குடிமக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது. கருப்பு படத்தின் இயக்குனர் ஆர்.ஜெ.பாலாஜி, கதாநாயகன் சூர்யா, நடிகை திரிஷா ஆகியோர் நீதித்துறை அமைப்பை அவமதித்துள்ளதால், அதை குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதி தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்று மனுதாரர் தமிழ்வேந்தன் தரப்பில் வாதிடப்பட்டாலும் இதை நீதிமன்றம் ஏற்கவில்லை.

ஆர்.கே.நாராயணனின் படைப்புகளில் மால்குடி என்பது ஒரு கற்பனைக் கிராமமாக இருப்பது போலவே, கருப்பு படத்தின் ஏழு கிணறு நீதி மன்றமும் ஒரு கற்பனையானதாகும். ஒரு கற்பனையான நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்கும் நபர் ஊழல்வாதியாகச் சித்தரிக்கப்படும்போது, அது 1971ம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தில் உள்ள தண்டனை விதிகளின் கீழ் வராது.

அவ்வாறு கற்பனையாக சித்தரிக்கப்பட்ட நீதிமன்றத்தில் ஊழல் என இயக்குநர் கூறியுள்ளாரே தவிர, ஒட்டுமொத்த நீதித்துறை அமைப்பையே ஊழல் நிறைந்ததாகச் சித்தரிக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே, கருப்பு படத்தை தடை செய்யக் கோரிய வழக்கில் முகாந்திரம் எதுவும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உத்தரவிட்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# த.வெ.க. மகளிரணி நிர்வாகி ரீல்ஸ்!

தேனி, மே 31 - த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்து ஆய்வு என்ற பெயரில் த.வெ.க. நிர்வாகிகள் அரசு அலுவலகங்களுக்குச் சென்று ரீல்ஸ் எடுத்து பதிவிடுகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக தேனி மாவட்ட த.வெ.க. நிர்வாகி எனக்கூறி அஜிதா தெய்வேந்திரன் என்பவர் கட்சி நிர்வாகிகளை அழைத்துக் கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று, மாவட்ட ஆட்சியருக்கு பூங்கொத்து கொடுப்பது போலவும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கட்சி மகளிர் நிர்வாகிகளை மாவட்ட ஆட்சியருக்கு அறிமுகம் செய்து வைப்பது போலவும் ரீல்ஸ் எடுத்து வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், த.வெ.க. தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பிரகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக வெற்றிக் கழக தேனி வடக்கு மாவட்டத்தில் இருந்து மாவட்ட மகளிர் அணி என்று யாருக்கும் பொறுப்பு வழங்கப்படவில்லை.

மாவட்ட மகளிர் அணியினர் என்றும் நிர்வாகிகள் என்றும் கட்சியின் பெயரை பயன்படுத்தி எந்த அரசு அலுவலகங்களையோ அல்லது தனியார் நிறுவனங்களையோ அணுகக் கூடாது என கட்சியின் சார்பில் எச்சரிக்கப்படுகிறது.

விதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக கட்சியின் சார்பில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.வெ.க. எம்.எல்.ஏ.க்களையே கட்சி நிர்வாகிகளுக்கு தெரியவில்லை. அணிகளின் நிர்வாகிகள் யார், யார் என்பது அந்த கட்சி நிர்வாகிகளுக்கு எப்படி தெரியும் என நெட்டிசன்கள் கிண்டலடித்து வருகின்றனர்.

## முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 103ஆவது பிறந்த நாளை

# ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவியை வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் அறிக்கை!



திருப்பூர், மே 31- திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை அரை நூற்றாண்டு காலம் சிறப்புடன் நிறைவேற்றியவர். 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புவகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 103வது பிறந்த நாளை திருப்பூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட திருப்பூர் தெற்கு பல்லடம் சட்டமன்ற தொகுதிகளில் புத்தெழுச்சியுடன் கொண்டாடுங்கள்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வித்தகராக திகழ்ந்த தமிழ் தாயின் தலைமகன், தமிழ் மொழியை, தமிழர்களை தன் உயிராய் நேசித்தவர், தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்ட விடாப்பிடியாக போராடி வெற்றி கண்டவர், உயர் கல்வியை வளர்த்தெடுக்க அயராது உழைத்து முத்திரை பதித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞரின் செயல்பாட்டு சிறப்பினை பின்பற்றி தமிழக மக்களுக்காக தொடர்ச்சியாக செயலாற்றி வரும் தி.மு.க தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று கலைஞரின் பிறந்த நாளான 03.06.2026 புதன் கிழமை அன்று காலை 9.00 மணியளவில் திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

அதே போல் அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக அலுவலகங்களிலும், சார்பு அணிகளின் அலுவலகங்களிலும், மாநகராட்சி வட்டங்கள், நகராட்சி, பேரூராட்சி வார்டுகள் மற்றும் ஒன்றியங்களில் ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிளைகளிலும் கலைஞரின் திருவுருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், திருப்பூர் தெற்கு, பல்லடம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள முதியோர் இல்லம், குழந்தைகள் காப்பகம், மாணவர் விடுதி, ஆதரவற்றோர் இல்லம், மனநலம் பாதிக்கப்பட்டோர் காப்பகம் அகிய இடங்களில் உள்ளவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்து, நலத்திட்டங்களை வழங்கிட வேண்டுமாய் கழகத்தினரை கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க. செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நீட் தேர்வு கட்டணத்தை திரும்பப் பெற விண்ணப்பிக்க ஜூன் 22 வரை அவகாசம்!

புதுடெல்லி, மே 31- நீட் நுழைவுத் தேர்வு கட்டணத்தை திரும்ப பெறுவதற்காக விண்ணப்பிப்பதற்காக காலஅவகாசம் வருகிற 22ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் இளங்கலை மருத்துவப்படிப்புக்களுக்கான நீட் நுழைவுத் தேர்வு கடந்த 3ம் தேதி நடைபெற்றது. ஆனால் வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரை அடுத்து 12ம் தேதி இந்த தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்தது.

மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள் செலுத்திய நுழைவுத் தேர்வு கட்டணம் திரும்ப வழங்கப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை தெரிவித்தது. இதனை தொடர்ந்து மாணவர்கள் தேர்வு கட்டணத்தை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 27ம் தேதியுடன் முடிவடைந்தது.

சுமார் 13 லட்சம் மாணவர்கள் நுழைவு கட்டணத்தை திரும்ப பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர். இந்நிலையில் தேர்வு கட்டணத்தை திரும்ப பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசத்தை தேசிய தேர்வு முகமை நீட்டித்துள்ளது. இதன்படி ஜூன் மாதம் 22ம் தேதி வரை மாணவர்கள் தாங்கள் செலுத்திய கட்டணத்தை திரும்ப பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

### ஜூன் 1 முதல் சரிபார்ப்பு!

சி.பி.எஸ்.இ. தனது எக்ஸ் தள பதிவில் வெளியிட்ட அறிக்கையில் “மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தேர்வு முடிவுகளுக்கு பிந்தைய நடவடிக்கைகளான விடைத்தாள் சரிபார்ப்பு மற்றும் மறுமதிப்பீடு உள்ளிட்ட பணிகளுக்கான இணைய தளத்தில் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களின் விடைத்தாள்களை சரிபார்ப்பது மற்றும் மறுமதிப்பீடு செய்வது ஆகிய பணிகளை வெளிப்படையாகவும், பிழையின்றியும் உறுதி செய்யும்பொருட்டு அதற்கென ஒதுக்கப்பட்ட இணைய தளம் ஜூன் 1ம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும். வெளிப்படையான மற்றும் பிழையற்ற செயல் முறையை உறுதி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இனிவரும் எந்தத் தேர்தலிலும் போட்டியிட நிரந்தரத் தடை விதித்து – இடைத் தேர்தல்

# செலவையும் - ராஜினாமா செய்த 5 எம்.எல்.ஏ.க்களிடமே வசூலிக்கவும்!

## தேர்தல் ஆணையத்திடம் – சமூக ஆர்வலர் கே.ஆர்.குகேஷ் மனு!

சென்னை, மே 31 - தமிழ்நாட்டில் காலியாக உள்ள 5 சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான செலவை, ராஜினாமா செய்த எம்.எல்.ஏ.க்களிடமே வசூலிக்க வலியுறுத்தி, தேர்தல் ஆணையத்திடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை சூளைமேட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கே.ஆர்.குகேஷ் என்பவர் இந்திய தேர்தல் ஆணையத்திற்கும், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரிக்கும் மனு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் ஜோசப் விஜய் இரண்டு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதால், திருச்சி தொகுதியை ராஜினாமா செய்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களான பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்யபாமா, அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, மதுராந்கம் மரகதம் குமரவேல் ஆகிய 4 பேரும் தேர்தல் முடிந்த ஒரு மாதத்துக்குள்ளாகவே தங்களது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ததை குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் வரிப் பணத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே இந்த ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் மறந்து, அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்யும் வகையில் ராஜினாமா செய்த பொறுப்பற்ற செயலால் அரசுக்கு தேவையற்ற நிதி சுமையும் பொதுமக்களுக்கு காலவிரையமும் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிட்டு இந்த 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் செலவை, பதவியை ராஜினாமா செயத அந்த நபர்களிடமே முழுமையாக வசூலிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் வரிப் பணம் வீணடிக்கப்படுவதை தடுக்க இதுவே சரியான வழிமுறை என்றும், கூறியுள்ளார்.

மேலும், ராஜினாமா செய்த ஐந்து நபர்களும் இனிவரும் காலங்களில் எந்த ஒரு தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் தகுதி நீக்கம் செய்து நிரந்தர தடை விதிக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர் குகேஷ் அனுப்பிய மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## பெட்ரோல், டீசல் உயர்வைக் கண்டித்து

# இருசக்கர வாகனத்திற்கு தீ வைத்து போராட்டம்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நூதன எதிர்ப்பு!

திருச்சூர், மே 31- பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து, கேரள மாநிலம் திருச்சூரில் இருசக்கர வாகனத்தை தீயிட்டு எரித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெட்ரோல், டீசல் விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து உயர்த்தி வருகின்றன. கடந்த 15 நாட்களில் மட்டும் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 8 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இந்நிலையில், எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து, கேரள மாநிலம் திருச்சூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போராட்டம் நடைபெற்றது. அப்போது, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவரின் இருசக்கர வாகனத்தை தீயிட்டு எரித்து, ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.




# வழக்கு விசாரணை முடிந்த 3 மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டும்!

## வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டது உச்ச நீதிமன்றம்!

சென்னை, மே 31 - உயர் நீதிமன்றங்கள் வழக்கு விசாரணை முடிந்த 3 மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டும் என வழிகாட்டி நெறிமுறை வழங்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணைகள் முடிந்த பின்னரும் தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை தடுக்கும் வகையில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரிய காந்த் தலைமையிலான அமர்வு, அரசியல் சாசன பிரிவு 142 அடிப்படையில் தனி அதிகாரத்தை பயன்படுத்தி வழிகாட்டி நெறிமுறை வழங்கிஉத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

அதன்படி, உயர் நீதிமன்றங்கள் வழக்கு விசாரணை முடிந்த 3 மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. ஜாமின் வழக்குகளில் விசாரணை முடிந்த மறுநாள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும், ஜாமின் உத்தரவுகளை உடனுக்குடன் சிறை அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை கைதிகள் உத்தரவு பிறப்பித்த அன்று அல்லது மறுநாள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தெரித்துள்ள உச்ச நீதிமன்றம், தீர்ப்பு விவரங்களை ஒரு வாரத்தில் இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பன உள்பட பல முக்கிய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.